சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
அசல் வழக்கு எண்.14/2016

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.D.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.காமாட்சி (PW1) | நாள்: 12.09.2019 |
| த/பெ.முருகேசன் | தொழில் |
| வயது.53 | வட்டம் |
| கிராமம்.வேலாமூர் | |

**வா.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த வழக்கில் நான் 3வது வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)